இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 5
**LWU 3312/4332** – காணிச்சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 30.03.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்

1. கீழ்வரும் நிலைமைகளை கவனத்தில் கொள்க:

(அ) குசும் அவளது தந்தையின் சொத்துக்கு ஏக வாரிசாகவும் நிறைவேற்றுனராகவும் அவரது இறுதி விருப்பாவணத்தின் மூலம் நியமிக்கப்பட்டாள். அவளது தந்தையின் இறப்பினால் அவள் 4 ஏக்கர் தேயிலைக் காணிக்கு இறுதி விருப்பாவணத்தின் கீழ் வழியுரிமையைப்பெற்றாள். ஆதனத்தை வைத்திருப்பதில் அவளுக்கு அக்கறையில்லை என்பதால் அதனை விற்பனை செய்ய அவள் முடிவு செய்தாள். எப்படியிருப்பினும் நிலத்தின் உரித்தை இன்னுமொருவருக்கு மாற்றும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அவள் எதுவும் அறிந்திருக்கவில்லை.

அவள் உம்மிடமிருந்து சட்ட அறிவுரையை நாடவிரும்புகிறாள்.

நியதிச்சட்ட பிரிவுகளுடன் தொடர்புபடுத்தி காணியின் உரித்து மாற்றத்தின் போது அவள் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி குசுமுக்கு அறிவுரை செய்க.

(ஆ) "உறுதியை கொடுப்பதற்கான அடுத்த செயற்பாடு இடம் பெறாவிட்டால் உறுதியை நிறைவேற்றுதல் என்பதற்கு சட்ட அடையாளம் கிடையாது. விற்பனையாளன் உறுதியை வைத்திருந்தால் முடிவில் எந்த உரித்தும் மாற்றப்படமாட்டாது."

இக் கூற்றை விமர்சித்து ஆராய்க.

2. பிரமிளா தனது 5 படுக்கையறைகளைக் கொண்ட வீட்டையும் ஒன்றரை ஏக்கர் காணியையும் 5 வருடங்களிற்கு சுபாஸ்சிற்கு குத்தகைக்கு கொடுத்தாள். குத்தகை உடன்படிக்கை நியதிகளுக்கமைய சுபாஸ் வீட்டை தனது குடும்பத்தினருக்கான இருப்பிடமாக பாவிக்கலாம் என பிரமிளா அனுமதித்தாள். பிரமிளாவின் எழுத்து மூலமான சம்மதமின்றி உப-குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது. அத்துடன் வழமையான திருத்தங்களை மேற்கொள்ளுதல் மூலம் ஆதனத்தையும் வீட்டையும் பராமரிக்க குத்தகை உடன்படிக்கையின் கீழ் சுபாஸ் பொறுப்பாக்கப்பட்டிருந்தார். குத்தகை உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடங்களுக்குப் பின்னர் பிரமிளா வெளிநாடு சென்றாள்.

பிரமிளா இலங்கையை விட்டு வெளியேறி சில மாதங்களின் பின்னர் பிரமிளாவின் தங்கையான நிர்மலா அவ்வாதனத்தில் அரைப்பங்கிற்கு தானும் உரித்துடையவள் என்று உரிமை கோரியதுடன் உடனடியாக வீட்டையும் ஆதனத்தையும் விட்டு வெளியேறும்படி சுபாஸை கோரினாள். அவளது கோரிக்கைக்கு சுபாஸ் இணங்காததால் வீட்டிலிருந்து சுபாஸை வெளியேற்ற நிர்மலா குண்டர் கூட்டம் ஒன்றை வேலைக்கமர்த்தினாள்.

ஒரு நாள் ஐந்து பேரைக்கொண்ட ஒரு கூட்டம் ஆயுதங்களுடனும் கனத்த தடிகளுடனும் பலவந்தமாக வீட்டினுள் புகுந்து ஒரு வாரத்திற்குள் வீட்டை விட்டு அவன் வெளியேறாவிட்டால் உயிரிழக்க வேண்டி வரும் என சுபாஸை அச்சுறுத்தினர்.

தனது உடமைக்கான உரிமையை பாதுகாப்பதற்கு இலங்கையில் காணிச்சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடியதாக உள்ள மிகப்பொருத்தமான சட்ட நிவாரணம் பற்றிய உமது அறிவுரையை சுபாஸ் தற்போது நாடுகிறார்.

தொடர்புடைய அதிகாரங்களின் பின்னணியில் சுபாஸ்ற்கு அறிவுரை செய்க.

3 வடக்கே பொதுப்பாதை, கிழக்கே ஆறு, தெற்கே கெரவல் பாதை மற்றும் மேற்கே "நுகதெனிய" என அழைக்கப்படும் லொட் 3 எனும் இன்னுமொரு காணி ஆகியவற்றை எல்லைகளாக கொண்ட 'கெசெல்வத்த' என அழைக்கப்படும் பிரிக்கப்படாத காணியின் 1/5 பகுதிக்கு சில்வா சொந்தக்காரனாவான். அமிதா பிரமிதா எனும் பெயருடைய அவனுடைய இரு சகோதரிகளும் கலன மற்றும் மெவன் ஆகிய இரு இளைய சகோதரர்களும் ஏனைய கூட்டுச் சொந்தக்காரர்களாவர்.

ஏனைய கூட்டுச்சொந்தக்காரர்களின் சம்மதத்துடன் பிரிக்கப்படாத தனது பாகத்தை சில்வா நிமல் என்பவருக்கு 08.01.2008 அன்று பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பிரதிபயனுக்கு விற்பனை செய்தான். D – 1234 என இலக்கமிட்டு நிமாலின் நொத்தாரிசால் நிறைவேற்றப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதியானது அவரின் கவனையீனத்தால் பதிவுசெய்யப்படவில்லை. இந்தகவல்களை அறிந்த சில்வா பின்னர் 10.02.2008 இல் ரூபா பதினைந்து இலட்சத்திற்கு அதே காணியை பியலுக்கு விற்பனை செய்தான். எப்படியோ D – 12345 என இலக்கமிடப்பட்ட அவ்வுறுதியை 11.02.2008இல் பியால் பதிவு செய்கின்றான். சில்வாவின் நண்பன் ஒருவன் மூலம் இந்த இரண்டாவது விற்பனை பற்றி அறிந்து கொண்ட நிமல் உடனடியாக தனது நொத்தாரிசுடன் தொடர்பு கொள்ள அவர் 12.02.2008 அன்று D – 1234 என இலக்கமிடப்பட்ட உறுதியின் பிரதி ஒன்றை பதிவுக்காக அனுப்பினார். எப்படியோ பதிவக நாட்புத்தக எழுதுவினைஞரின் கவனயீனத்தால் உறுதியானது சரியான பக்கத்திற்கு (Folio) குறுக்குத்தொடர்பு அற்ற பிழையான பக்கத்தில் (Folio) பதியப்பட்டது. பதிவின் மூலம் முன்னுரிமையை தான் கோரலாமா என அறிய நிமல் விரும்புகின்றான்.

நியதிச்சட்ட பிரிவுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி நிமலுக்கு சட்டக்கருத்தொன்றை வரைக.

4. "பாதைக்கான உரிமை அவசியமாயின் அத்தகைய வழங்கப்பட்ட கட்டளையின் பின்னர் அதனைப் பிரயோசனைப்படுத்த வேண்டும் எனும் சட்டத்தை ஒருவர் ஏற்கவேண்டும், வழக்காளி தான் நாடும் வண்டிப்பாதையின் அவசியத்தை நிறுவவேண்டும், மேலும் நிகழ்வுகளை பரீட்சிப்பது அவசியமாகின்றது என்பதுடன் அத்தகைய நிகழ்வுகள் பாதைக்கான அவசியத்தை கோருவதை அதிகரிக்கின்றதா என்பதையும் வழக்காளி நிறுவத்தவறி விட்டார்."

**Ceylon Petroleum Corporation v. Mashood** (2004) 2 SLR 55

மேற்தரப்பட்ட கூற்றின் பின்னணியில் சேவக உரிமையுடன் தொடர்புடைய பின்வரும் சட்ட நிலமைகளை ஆராய்க.

(அ) 'பாதை உரிமைக்கான அவசியம்' என்பதன் அர்த்தம்.
(ஆ) குறிப்பாக எதனடிப்படையில் பாதைக்கான உரிமையாது நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்றன.

தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

5. கூட்டுச்சொந்தத்துடன் தொடர்புடைய கீழ் வரும் சட்டநிலமைகளை தீர்ப்புச்சட்டங்களுடன் தொடர்புறுத்தி சுருக்கமாக ஆராய்க.

(அ) கூட்டுச்சொந்தம் உருவாவதற்கான வித்தியாசமான மாதிரிகள்.
(ஆ) கூட்டுச்சொந்தம் முடிவுறுவதற்கான மாதிரிகள்.
(இ) கூட்டுச்சொந்தக்காரரின் உரிமையை ஆளும் அடிப்படைக்கொள்கைகள்.
(ஈ) ஒரு கூட்டுச்சொந்தக்காரரால் மற்றைய கூட்டுச்சொந்தக்காரருக்கு எதிராக கோரப்படும் ஆட்சியுரிமை உரித்துக்கான கோரிக்கை.

6. "உரித்துக்கான விளம்பலைக் கோரும் கட்சிக்காரர் தன்வசம் உரித்தை வைத்திருக்க வேண்டும் என்பதற்கு தொகையான ஆதாரம் (Authority) இருக்கிறது. உரித்துரித்து (*rei venddicatio*) வழக்கை கொண்டுவரும் வழக்காளி உண்மையிலேயே அவனுக்கு வழங்கப்பட்ட சொத்துவத்தை (உரிமையை) கொண்டிருக்க வேண்டும். பிணக்கின் தொகுப்பிற்கு வழக்காளி உரித்தைக்காட்ட வேண்டும் என்றும் அப்படி அவனுக்கு செய்ய முடியாவிட்டால் வழக்கு தாக்குப்பிடிக்க மாட்டாது எனவும் அதிகாரங்கள் ஒன்றுபட்ட கருத்தை கொண்டுள்ளன."

**Mansil v. Devaya**(1985) 2 SLR .46

உமது விடையை தொடர்புடைய அதிகாரத்துடன் ஆதாரப்படுத்தி மேலே தரப்பட்ட கூற்றை உரித்துரித்து வழக்கு நடவடிக்கையின் தன்மை, எல்லை, நோக்கு மற்றும் செயற்திறன் ஆகியவற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

7. சமூகத்தின் பரந்த அக்கறை மற்றும் தனிநபர் அக்கறை ஆகியவற்றக்கு இடையேயான முரண்பாட்டு சமநிலையான அரசின் குறுக்கீட்டால் அடிப்படை பண்பு மற்றும் சொத்துவத்தின் உரிமை ஆகியன எவ்வாறு குறிப்பிடத்தக்களவு துண்டாடப்படுகின்றன என விமர்சித்து மதிப்பீடு செய்க.

உமது விடையை சம்பந்தப்பட்ட நியதிச்சட்டப்பிரிவுகளுடன் ஆதாரப்படுத்துக.

8. கீழ்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்கு** சிறு குறிப்பெழுதுக.

(அ) ஆட்சியுரிமை உரித்தை நிறுவுவதற்கான 1871ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க ஆட்சியுரிமை கட்டளைச்சட்டத்தின் பிரவு 3 இன் இடைப்பிறவரலாக வரும் (parenthetical) வாசகத்தின் முக்கியத்துவம்.

(ஆ) *Ius retentionis and Ius tollendi*

(இ) ஈடு பெறுபவரின்(mortgagee) உரிமை.

(ஈ) திருத்தங்களுக்காக நட்டஈடு கோரும் சொந்தரக்காரர்கள் அல்லாதவர்களின் உரிமை.

(பதிப்புரிமையுடையது)